[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2011 பிப்ரவரி 10

ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் தூண்டி விடாமல் இருந்தால் போதும். ஏனென்றால், அரசியல் கட்சிகள் தற்போது இதை அரசியல் ஆக்க வேண்டாம் என்று இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) நாங்கள் நடிக்கவில்லை. (குறுக்கீடு) தூங்கவும் இல்லை, நாங்கள் நடிக்கவும் இல்லை. அந்தப் பழக்கம் எங்களுக்குக் கிடையாது. நாங்கள் இருக்கின்ற வரை எங்களால் முடிந்தவரை நாங்கள் உழைத்துக்கொண்டிருக்கின்றோம். மருத்துவ நிருவாகத்தில், சில மருத்துவர்களைக் கடுமையாக கண்காணிக்கும்போது, அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, அதனால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதில் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) உட்காருங்கள், அதெல்லாம் முடியாது. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010, 2010-2011 ஆம் ஆண்டுகளுக்கான அவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்ற பொறுப்பினை வழங்கி இருக்கிற பசியில்லாத தமிழகம், பிணி இல்லாத தமிழகம், கல்விப் புரட்சி கண்ட தமிழகம், கடன் இல்லாத விவசாயிகளைக் கொண்ட தமிழகம் என இந்தியாவிலேயே முன் மாதிரி மாநிலமாக, வழிகாட்டி மாநிலமாகத் திகழச் செய்து, 1971 ஆம் ஆண்டு இந்தியாவின் இரும்பு மங்கை அன்னை இந்திரா அவர்களின் துணையோடு ஆட்சிப் பொறுப்பேற்றதைப்போல் (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டிலும் இந்திய நாட்டின் இன்றைய தியாகத் திருவிளக்கு அன்னை சோனியா காந்தி அவர்களுடைய ஆதரவோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நன்றி உணர்வோடு மீண்டும் மகத்தான வெற்றி பெற்று 6-வது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்கயிருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) இமயம் போன்று உயர்ந்து நின்று, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இமையாய் இருந்துவரும் இனமான எங்களுடைய

2011 பிப்ரவரி 10] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

பேராசிரியர் பெருந்தகை அவர்களையும், இதுபோன்ற பொறுப்புக்களுக்கு என்னைப் பரிந்துரைத்து வாய்ப்பை நல்கி இருக்கிற தகுதியினால் பெருமைகொண்டு, தியாகத்தால் உரிமை தொண்டினால் பதவி பெற்று, சாதனைகளால் சரித்திரப் புகழ் பெற்றிருக்கிற எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி,

"கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்கின்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு ஏற்றவாறு இப்பேரவையில் இந்த 5 ஆண்டுகளில் என்னுடைய கருத்துகளுக்கு முகவரி தந்த பேரவைத் தலைவராக இருக்கிற தங்களுக்கும், இவற்றிற்கெல்லாம் உறுதுணையாக இருந்த எங்களுடைய அரசு கொறடா மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் மற்றும் சாலைகளும், பாலங்களும் குறித்த முப்பத்து ஆறாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் அறிக்கைகளை அச்சடித்து பேரவைக்கு அளிக்க இயலவில்லை. இந்த அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து ஒன்றாவது முதல் நூற்று எண்பத்து நான்காவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.